**இ.ஊ.சா.பு.ஆ சுற்றுநிருப இல : 01/ 2025**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய
சார்த்துதல்களைப் புலனாய்வு
செய்வதற்கான ஆணைக்குழு,
இல. 36, மலலசேகர மாவத்தை
கொழும்பு 07 .
2025.03.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்
பிரிவு 80 (1) இன் கீழ் சொத்துக்களையும் பொறுப்புக்களையும்
வெளிப்படுத்துதலுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும்
பொறுப்பேற்கும் நிறுவனத் தலைவர்களுக்கு,

## 2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல்

2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம், தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் தொடர்பான சட்டம் நீக்கப்பட்டுள்ளதுடன், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 79 ஆவது பிரிவிலிருந்து 92 ஆவது பிரிவு வரை சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் தொடர்பான விதிமுறைகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

2. அதன் அடிப்படையில் மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையொன்றை ஸ்தாபித்து அதன் மூலம் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் பரிசீலனைக்குறப்படுத்தும் பொறுப்பு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

3. ஆணைக்குழுவின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையொன்றின் உருவாக்கத்திற்கான பரீட்சார்த்த வேலைகளை நிறைவு செய்து சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல்களுக்கான மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையை முறையாக ஆரம்பிக்கும் வரைக்கும் நிலைபெயர்காலப்பகுதியின் போது அல்லது எந்த சந்தர்ப்பங்களிலும் இலத்திரனியல் முறைமை தொழில்நுட்பப் கோளாறு காரணமாக செயலிழந்துள்ளதோ அந்த சந்தர்ப்பங்களில் பிரிவு 83(7) இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வெளிப்படுத்தலை கையினாலான சமர்ப்பிப்பின் அடிப்படையில் சமர்ப்பிக்க ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது

4. இங்கு **இணைப்பு I** இல் உள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்ப, வெளிப்படுத்துனர் இதுவரைக் காலமும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல்களை வழங்கிய நிறுவனத்தலைவர்களிடம் உரிய வெளிப்படுத்தலை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. அந்த வெளிப்படுத்தலுடன் தொடர்புடைய டிஜிட்டல் மாதிரியை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து, நிரப்பிய பின் கையொப்பமிடப்பட்ட அச்சிடப்பட்ட பிரதியை நிறுவனத்தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. குறித்த நிறுவனத்தலைவர்கள் மூலம் அனைத்து வெளிப்படுத்தலகளையும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கும் படி இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

7. குறித்த சட்டத்தின் 80(1) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய நபர்கள் **இணைப்பு II** இன் I வது நிரலிலும், குறித்த நபர்கள் தங்களது சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பது இணைப்பு II இன் II நிரலிலும் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

8. குறித்த சட்டத்தின் 82 ஆவது பிரிவின் படி **இணைப்பு III** இல் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

9. மேலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை பூரணப்படுத்துவது தொடர்பான வழிகாட்டல் குறிப்புக்கள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து உங்கள் பயன்பாட்டிற்காக பெற்றுக் கொள்ளலாம்.

10. அவ்வெளிப்படுத்தல்களை மத்திய அதிகார சபைக்கு சமர்ப்பிக்கும் போது உங்களால் அவதானம் செலுத்தப்பட வேண்டிய, பின்பற்றபட வேண்டிய முறைகள் இச்சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தத் பத்திரம் (இணைப்பு X) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

11. அங்கு தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு ஏற்ப தகவல்களைப் பூரணப்படுத்தி அதன் மென்பிரதியை (Soft Copy) assets@ciaboc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் மூலப்பிரதிகளை ஆணைக்குழுவிற்கு வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்கும் போது அத்துடன் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் கட்டளைப்படி,**

பணிப்பாளர் நாயகம்,
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு